# பின்னிணைப்பு C - தடுப்பு நடவடிக்கைகள்

வாக்காளர் பதிவாளரிடம் (ROV) தேர்தல் செயல்முறைக்கு இடையூறு ஏற்படாமல் இருக்க பின்வரும் தடுப்பு நடவடிக்கைகள் உள்ளன:

**நிலையான பாதுகாப்பு நடவடிக்கைகள்**
தேர்தல் தொடர்பான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான அணுகலை மட்டுப்படுத்தி, இறுதியில் எந்த விதமான இடையூறு சாத்தியங்களையும் தடுப்பது:

- ஊழியர்கள் கவுண்ட்டி அல்லது துறை வழங்கிய ஐடி பேட்ஜ்களை அணிய வேண்டும்.
- முன் மேசையைத் தாண்டி துறையின் அலுவலகங்களுக்குள் நுழையும் பார்வையாளர்கள் அல்லது ஊழியர்கள்-அல்லாதவர்கள் அவர்கள் சந்திக்க வந்த ஊழியருடன் சேர்ந்து வர வேண்டும்.
- துறையின் கணினி சேவையக அறை மற்றும் வாக்குச்சீட்டு அறைகள் எப்போதும் வரம்பிற்குட்பட்ட பேட்ஜ் அணுகல் மற்றும் வீடியோ கண்காணிப்பு மூலம் பாதுகாக்கப்படுகின்றன.

**சேவையக மற்றும் பிணைய காப்பு**
பிரதான சேவையகம் அல்லது பிணையம் செயல்படாத நிலை ஏற்பட்டால், தகவல் ஓட்டத்தில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- துறையின் வாக்களிப்பு முறை, வாக்குச்சீட்டு அமைப்பு மற்றும் வடிவமைப்பு, மற்றும் தேர்தல் மேலாண்மை அமைப்பின் (EMS) செயல்பாடுகள் ஆகியவை கவுண்ட்டியின் பாதுகாக்கப்பட்ட தரவு மையத்தில் அமைந்திருக்கும்.
- இந்தத் தரவிற்கான காப்புத் தானியங்கி முறையில் செய்யப்படும், மற்றும் பிரதான சேவையகம் செயல்படாமல் போனால், பயன்படுத்துகிற மாதிரி தயாராக வைத்திருக்கப்படும்.
- வாக்காளர் தரவு, வாக்களிப்பு முறை மற்றும் EMS ஆகியவற்றில் செய்யப்படும் மாற்றங்கள், வழக்கமான அட்டவணைப்படி காப்புப்பிரதி எடுக்கப்படுகின்றன.

**வாக்கு மைய உபகரணங்களுக்கான காப்புப்பிரதி அமைப்பு**
ஏதாவது உபகரணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- ஒரு வாக்கு மையத்தில் ஏற்படும் நிகழ்வு காரணமாக அவர்களின் தற்போதைய உபகரணங்களைப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டால், வாக்களிப்பு இடத்தில் வாக்காளர்களைச் செயல்படுத்துவதை தொடர்கிற வகையில், துறையில் கூடுதல்

உபகரணங்கள் உள்ளன.

- கூடுதல் உபகரணம் இல்லாத நிலையில், வாக்குமையமானது கையால் நேரடியாக இயக்கும் திறனைக் கொண்டுள்ளது.

**உபகரணம் காணாமல் போனால்**
ஏதாவது உபகரணம் காணாமல் போன நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- ஒரு வாக்குமையத்தில் உபகரணங்களைக் காணவில்லை என்றால், வாக்குமைய தலைவர் அதை பிரதான ROV அலுவலகத்திற்கு தெரிவிப்பார்.
- காப்புத் தேர்தல் உபகரணங்களைச் சேமிக்கும் ஒரு மொபைல் சப்ளை டிரக்கைக் கிடங்கு ஊழியர்கள் நிர்வகிப்பார்கள்.
- குறைந்தது இரண்டு கிடங்கு ஊழியர் உறுப்பினர்கள் வாக்குமையத்தில் பொருட்கள் மற்றும் உபகரணங்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக சப்ளை டிரக்கிலிருந்து வாக்குமையத்திற்கு தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்களை வழங்குவார்கள்.

**காப்பு வாக்களிப்பு சப்ளைகள்**
ஏதாவது உபகரணம் பயன்படுத்த முடியாத அல்லது காணாமல் போன நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- வாக்குமைய ஊழியர்களுக்காக தயாரிக்கப்பட்ட கொள்கலங்களின் நகல் பராமரிக்கப்படும்.
- காப்பு வாக்களிப்பு சப்ளைகளை பராமரிப்பதற்கு வாக்குமைய ஒருங்கிணைப்பாளர் பொறுப்பாவார்.
- ஒரு தளம் இடமாற்றப்பட வேண்டியபோது, பணிசெய்பவர்களால் தங்களது தற்போதைய சப்ளை பொருட்களைச் சேகரிக்க முடியாவிட்டால், முடிந்தால், புதிய தளத்தில் காப்புப் பொருட்கள் வழங்கப்படும்.

**வராத வாக்கு மைய ஊழியர்கள்**
வாக்கு மைய ஊழியர்கள் அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணி நேரத்தில் வராதபோது, வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- வாக்குமையத்திற்காக மாற்று ஊழியர்களைப் பெறுவதற்கு வாக்குமைய தலைவர் ROV அலுவலகத்தைத் தொடர்பு கொள்வார்.
- பயிற்சிபெற்ற மாற்று ஊழியர்களின் பட்டியல் பிரதான ROV அலுவலகம் மூலம் பராமரிக்கப்படும்.

**சந்தேகத்திற்குரிய நபர் அல்லது பொருள்**
சந்தேகத்திற்குரிய நபர் அல்லது பொருள் மூலம் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- நிலைமையைப் பொறுத்து வாக்குமையதலைவர் பாதுகாப்பு அதிகாரிகளைத் தொடர்புகொள்வார்.

**கைமுறை அமைப்புகளை சரியாக வைத்திருப்பது**
ஏதாவது மின்னணு வாக்குப்பதிவு உபகரணங்களைப் பயன்படுத்த முடியாத நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க:

- அனைத்து செயல்பாடுகளையும் கைமுறை செயல்முறை மூலம் செய்ய முடிய வேண்டும்.